மதுராந்தகம் நகராட்சிக்குப் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா எண் 634:— திரு எஸ். டி. உகம்சந்த் ; மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுராந்தகம் நகராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் எப்போது பூர்த்தியாகும் ?

(ஆ) திட்ட மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இத் திட்டம் மார்ச், 1982 இறுதியில் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) இத் திட்டத்திற்கு மதிப்பீடு ரூ. 32.92 இலட்சங்களாகும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு மதுராந்தகம் நகரத்தில் உள்ள குடிநீர்ப் பிரச்னையைத் தீர்த்துவைத்திருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் இந்தத் திட்டம் மூன்று கிணறுகளைக் கொண்டு ஆரம்பிக்கப்படவேண்டுமென்று மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால் இரண்டு கிணறு வேலைகள் தான் இதுவரையில் பூர்த்தியாகியிருக்கிறது. மேலும், மூன்றாவது கிணறு வேலை பூர்த்தியாக்கப்படவில்லையென்று தெரிகிறது. அதையும் பூர்த்தி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. எல்லா வேலைகளையும் பூர்த்தியாக்கி, மார்ச் இறுதிக்குள் தண்ணீர்கொடுக்க முழுமையான ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன், மதிப்பீடு ரூ. 32.92 இலட்சங்கள் என்றாலும், இப்பொழுதே ரூ. 27.23 இலட்சம் ஆகியிருக்கிறது; ரூ. 5 இலட்சம் அதிகமாகவே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு எப்பொழுது கொடுக்கப்படும் ? இதற்காக யாருக்கு உரிமம் வழங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்காங்குள்ள அதிகாரிகளுக்கு ஹவுஸ் கனெக்ஷன்ஸ் வேண்டுமென்று மனு செய்தால் அதன் மெரிட்ஸ் மீது அவர்கள் கவனிப்பார்கள்.